தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-2272060 9443699066

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

கனி பிரிண்டிங்
DTP
நாளிதழ் வார இதழ் மாத இதழ்
சிறந்த முறையில் (DTP) செய்து தரப்படும்
நாளிதழ் மற்றும் மேகசின் குறைந்த விலையில் பிரிண்டிங் செய்து தரப்படும்
தொடர்புக்கு : 94436 99066

மலர்:03 இதழ்:264 4 பக்கங்கள் 22:04:2026 புதன்கிழமை விலை ரூ,6 வருடசந்தாரூ,1825



ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்.

**விளக்கம்:**
இவ்விடத்துப் பகைவரை தெறுதலும், நட்டோரை யாக்குதலுமாகிய வலி ஆராயின் முன்செய்த தவத்தினாலே வரும். இது பிறரை யாக்குதலும் கெடுத்தலுந் தவத்தினாலே வருமென்றது.

## மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேறாததற்கு எதிராக உ.பி. முதல்வர் யோகி நடைபயணம்



லக்னோ: ஏப்,22

மகளிர் இடஒதுக்கீடு மசோதா மக்களவையில் தோல்வியடைந்ததற்கு எதிராக, உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் இன்று நடைபயண போராட்டம் நடத்தினார்.மக்களவையில் எதிர்க்கட்சிகளின் ஆதரவு இல்லாததால், ஏப்ரல் 17-ஆம் தேதியன்று மகளிர் இடஒதுக்கீடு மசோதா தோல்வியடைந்தது. இதற்கு எதிராக உத்தரப் பிரதேச மாநில பாரதிய ஜனதா கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட 'ஜன் ஆக்ரோஷ் மகிளா பாதயாத்திரை' (மக்கள் சீற்ற மகளிர் நடைபயணம்) நிகழ்வில், முதல்வர் யோகி ஆதித்யநாத், பாஜக மாநிலத் தலைவர் பங்கஜ் சவுத்ரி மற்றும் அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.முதல்வரின் இல்லத்திலிருந்து சட்டப்பேரவை வரை நடைபெற்ற இந்த நடைபயணத்தில், பெண் அமைச்சர்கள் உட்பட ஏராளமான பெண்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்வில், முதல்வர் யோகி ஆதித்யநாத் எதிர்க்கட்சிகளை நோக்கிப் பல கேள்விகளை எழுப்பினார். இந்த நடைபயணத்திற்காக பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.இந்த நடைபயணம் குறித்து பேசிய உத்தரப் பிரதேச அமைச்சர் ஆஷிஷ் படேல், "நாட்டின் பெண்களுக்கு அவர்களின் உரிமைகள் கிடைக்கக்கூடாது என்ற, பெண்களுக்கு எதிரான அறிவிக்கப்படாத ஒரு நிகழ்ச்சி நிரலை எதிர்க்கட்சிகள் வகுத்துள்ளன. 2023-ஆம் ஆண்டில் இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டு, அனைத்துக் கட்சிகளும் இணைந்து அதன் செயலாக்கத்தை முன்னெடுத்தபோது, எவ்விதமான சர்ச்சையும் எழவில்லை. ஆனால், இந்த மசோதாவை நடைமுறைக்குக் கொண்டுவரும் போது, எதிர்க்கட்சிகள் அதைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டன. நாட்டின் பெண்கள் தங்களுக்குரிய உரிமைகளைப் பெறக்கூடாது என்பதே, பெண்களுக்கு எதிரான அவர்களின் அறிவிக்கப்படாத மறைமுகத் திட்டமாகும்" என்றார்.இதுகுறித்து துணை முதல்வர் பிரஜேஷ் பதக் கருத்து தெரிவிக்கையில், "எதிர்க்கட்சிகள் பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவை தடுத்து நிறுத்திய விதம் மிகவும் வருத்தமளிக்கிறது. இது குறித்துப் பெண்கள் மிகுந்த கோபத்தில் உள்ளனர். இதற்கான விலையை வரவிருக்கும் தேர்தல்களில், சமாஜ்வாதி கட்சியும், காங்கிரஸும் நிச்சயம் கொடுப்பார்கள்" என்றார்.


## ராஜஸ்தானில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் தீ விபத்து



ஜெய்ப்பூர்:ஏப்,22

ராஜஸ்தானின் பலோத்ரா மாவட்டம் பச்பத்ரா என்ற இடத்தில் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (எச்பிசிஎல்), ராஜஸ்தான் அரசின் கூட்டு முயற்சியால் ரூ.43,129 கோடி செலவில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை கட்டப்பட்டுள்ளது.இந்த ஆலை பிரதமர் நரேந்திர மோடியால் இன்று திறந்து வைக்கப்பட இருந்தது. இந்நிலையில் இந்த ஆலையின் சிடியு பிரிவில் நேற்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. தீ கொழுந்துவிட்டு எரிந்ததால் அப்பகுதியில் வானில் கரும் புகைமூட்டம் உருவானது. இந்த தீ விபத்தில் உயிர்ச் சேதங்கள் குறித்த தகவல் எதுவும் இல்லை.

## சத்தீஸ்கரில் விமான விபத்தில் 2 பைலட் உயிரிழப்பு



ஜாஷ்பூர்:ஏப்,22

சத்தீஸ்கரின் ஜாஸ்பூர் மாவட்டத்தில் தனியார் விமானம் ஒன்று மலைப்பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த இரு பைலட்டுகளும் உயிரிழந்தனர்.தனியார் நிறுவனத்தை சேர்ந்த ஒற்றை இன்ஜின் சிறிய ரக விமானம் ஒன்று சத்தீஸ்கரின் ஜாஸ்பூர் மாவட்டத்தில் நேற்று பறந்து சென்றது. சுமார் 30 அடி உயரத்தில் தாழ்வாக பறந்து சென்ற விமானம், மரத்தில் மோதி கீழே விழுந்ததாக விமான விபத்தை பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் 2 பைலட்டுகளும் உயிரிழந்தனர். விமான விபத்து நடைபெற்ற இடத்துக்கு மீட்பு குழுவினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

# தமிழக தேர்தல் களத்தில் அனல் பறந்த அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் நிறைவு




சென்னை: ஏப்,22

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரம் இன்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இன்று மாலையுடன் தங்கள் அனல் பறக்கும் பிரச்சாரத்தை நிறைவு செய்தனர். இதையடுத்து, வாக்குப்பதிவு நாளான 23-ம் தேதி மாலை 6 மணி வரையிலான 48 மணி நேர அமைதி கால கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வந்தன.தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்றுடன் ஓய்ந்த நிலையில், இன்று காலை முதல் திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் சென்னையில் உள்ள சோழிங்கநல்லூர், வேளச்சேரி, சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.சென்னையில் நடந்து சென்று வாக்கு சேகரித்த ஸ்டாலின், ஆட்டோ ஓட்டியும், இளைஞர்களிடம் செல்ஃபி எடுத்தும் உற்சாகமாக பிரச்சாரம் செய்தார்.அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று தான் போட்டியிடும் எடப்பாடி சட்டப்பேரவைத் தொகுதியில் தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். சேலம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு பேசினர்.நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இன்று தான் போட்டியிடும் காரைக்குடி சட்டப்பேரவைத் தொகுதியில் வாகனப்பேரணி சென்று வாக்கு சேகரித்தார். இன்று மாலையில் காரைக்குடி பாண்டியன் திரையரங்கம் திடலில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பிரச்சாரத்தை நிறைவு செய்தார்.தவெக தலைவர் விஜய் இன்று சென்னையில் இறுதிகட்ட பிரச்சாரம் மேற்கொண்டார். நந்தனத்தில் நடந்த பிரச்சாரத்தில் விஜய் கலந்துகொண்டு பேசினார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஒரே கட்டமாக 23-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் கடந்த மார்ச் 15-ம் தேதி வெளியிட்டது. அன்றைய தினமே நடத்தை விதிகள் அமலுக்கு வந்தன. தமிழகம் முழுவதும் பறக்கும் படையினர், நிலைக் கண்காணிப்புக் குழுவினர் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி, அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, நாம் தமிழர் கட்சி, தவெக என நான்கு முனைப் போட்டி நிலவுகிறது.234 தொகுதிகளிலும் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 5.73 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இதற்காக 75,064 வாக்குச்சாவடிகள் தயார் நிலையில் உள்ளன. தேர்தல் பணியில் 83,875 போலீஸார், 40,427 அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பாதுகாப்பு பணியில் 300 கம்பெனி துணை ராணுவப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள், 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுப்பாட்டு இயந்திரங்கள், விவிபாட் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், வண்ணப் புகைப்படம், கட்சியின் சின்னம் ஆகியவை பொருத்தப்பட்டு, தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இவை பலத்த பாதுகாப்புடன் நாளை (ஏப்.22) வாக்குச்சாவடி வாரியாக அனுப்பி வைக்கப்படுகின்றன.'அமைதி கால' வழிகாட்டுதல்கள்: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலை 6 மணியுடன் முடிவடைந்தது. இன்று மாலை 6 மணி முதல் வாக்குப்பதிவு நாளான 23-ம் தேதி மாலை 6 மணி வரையிலான 48 மணி நேர அமைதி காலத்தில் அரசியல் கட்சிகள் கடைபிடிக்கவேண்டிய வழிகாட்டுதல்களை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.


## ஏப்., மே, ஜூன் மாதங்களில் பட்டாசு உற்பத்திக்கு தடை விதிக்கலாமே? - நீதிபதிகள் யோசனை



மதுரை: ஏப்,22

விபத்துகளை தடுக்க ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் பட்டாசு உற்பத்திக்கு தடை விதிக்கலாமே என நீதிபதிகள் யோசனை தெரிவித்துள்ளனர். சிவகாசியை சேர்ந்த சமுத்திரவள்ளி உள்ளிட்டோர் 2014 பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்த கணவரின் மரணத்துக்கு இழப்பீடு கோரி வழக்கை தாக்கல் செய்திருந்தனர்.இந்த மனுவை விசாரித்த நீதிபதி புகழேந்தி, விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசுப் பணி, கணவரை இழந்தோருக்கான ஓய்வூதியம், வீடு உள்ளிட்ட மறுவாழ்வு பணிகளை அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு உத்தரவுகளை வழங்கியிருந்தார்.இந்த உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் அரசுத் தரப்பில் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வு, "தொடர்ச்சியாக விபத்துக்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது? இது வருத்தத்தை ஏற்படுத்துகின்றன. உரிய தீர்வு காணப்பட வேண்டும்" என தெரிவித்தனர்.அரசுத் தரப்பில், "விருதுநகர் வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களை அடக்கம் செய்ய ரூ.50 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டது.அதற்கு நீதிபதிகள், "தொழிலாளர்களுக்கு ரூ.25 லட்சம் முதல் 30 லட்சம் ரூபாய் காப்பீடு செய்த பின்னரே அவர்கள் அப்பணியில் ஈடுபடுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். விபத்துகள் நிகழ்வது துரதிஷ்டவசமானது. பெண்களே பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர்" என கருத்து தெரிவித்தனர். தொடர்ந்து, "கோடை காலங்களில் பட்டாசு உற்பத்தியை நிறுத்தி வைப்பது தொடர்பாக அரசு முடிவெடுக்க வேண்டும்" என குறிப்பிட்டு, வழக்கறிஞர்கள் தரப்பில் பட்டாசு ஆலை விபத்துகளை தடுப்பது தொடர்பான பரிந்துரைகளை வழங்க உத்தரவிட்டு வழக்கை ஜூன் 8-ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

## திருவாரூரில் வாக்கு எண்ணும் மைய ஆய்வு அதிகாரிகள் தீவிர கண்காணிப்பு



திருவாரூர் :ஏப்,22

திருவாரூர் மாவட்ட வாக்கு எண்ணும் மையமான திரு.வி.க.அரசு கலைக்கல்லூரியில் நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முடிவுற்று, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்படவுள்ள வைப்பறை மற்றும் வாக்கு எண்ணும் அறைகளை 168.திருவாரூர் மற்றும் 169. நன்னிலம் சட்டமன்றப் பேரவை தேர்தல் பொது பார்வையாளர் திரு. அஜய் யாதவ், இ,ஆ.ப., அவர்கள், 166. திருத்துறைப்பூண்டி மற்றும் 167. மன்னார்குடி சட்டமன்றப் பேரவை தேர்தல் பொது பார்வையாளர் திருமதி. டி.வி.அனுபமா, இ.ஆ.ப., அவர்கள், திருவாரூர் மாவட்ட தேர்தல் பொது காவல் பார்வையாளர் திரு.ஆஷிஷ்., இ.கா.ப., அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து உரிய அலுவலர்களிடம் விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்கள். திருவாரூர் மாவட்ட வாக்கு எண்ணும் மையமான திரு.வி.க.அரசு கலைக்கல்லூரியில் நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முடிவுற்று, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்படவுள்ள வைப்பறை மற்றும் வாக்கு எண்ணும் அறைகளை 168. திருவாரூர் மற்றும் 169.நன்னிலம் சட்டமன்றப் பேரவை தேர்தல் பொது பார்வையாளர் திரு.அஜய் யாதவ், இ,ஆ.ப., அவர்கள், 166. திருத்துறைப்பூண்டி மற்றும் 167. மன்னார்குடி சட்டமன்றப் பேரவை தேர்தல் பொது பார்வையாளர் திருமதி. டி.வி.அனுபமா, இ.ஆ.ப., அவர்கள், திருவாரூர் மாவட்ட தேர்தல் பொது காவல் பார்வையாளர் திரு.ஆஷிஷ்., இ.கா.ப., அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து உரிய அலுவலர்களிடம் விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்கள். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஃ திட்ட இயக்குநர் செல்வி. பல்லவி வர்மா, இ.ஆ.ப., அவர்கள், திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.யு.கருண்கரட், இ.கா.ப., அவர்கள் உடனிருந்தனர். இவ்ஆய்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.பா.கலைவாணி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) திரு.அருண்சத்யா, திருவாரூர் துணை காவல் கண்காணிப்பாளர் திரு. மணிகண்டன், திருவாரூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.சத்யா, மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.யோகேஸ்வரன், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.செல்வபாண்டியன், நன்னிலம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.ரவிச்சந்திரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## "என் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் செந்தில் பாலாஜி தான் பொறுப்பு" - எம்.ஆர். விஜயபாஸ்கர்



கரூர்: ஏப்,22

கரூர் "என் உயிருக்கு ஆபத்து உள்ளது. எனக்கும், என் குடும்பத்தாருக்கும் ஏதேனும் நிகழ்ந்தால் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியும், அவரது தம்பி அசோக்குமாரும் தான் பொறுப்பு" என முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தெரிவித்தார். கரூர்மாவட்ட அதிமுக அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "புதிய பேருந்து நிலையத்தில இருந்து உழவர் சந்தையில் இருந்து திருமாநிலையூர் வரை போக்குவரத்து நெரிசல ஏற்படுவதால் உழவர் சந்தை மேற்புற வளைவு முதல் செல்லாண்டிபாளையத்தை இணைக்கும் வகையில் அமராவதி ஆற்றில் உயர்மட்ட பாலம் அமைக்கப்படும்.கரூர் மாவட்டத்தில் புதிய சட்டக் கல்லூரி அமைக்கப்படும். கரூரில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்கப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் மாவட்டத்தில் கானகத்திற்குள் கரூர் திட்டத்தில் 50 லட்சம் மரக்கன்றுகள் நடப்படும். கோயில் இனாம் நில தொடர்பாக வழக்கு தொடர்ந்துள்ள திருத்தொண்டர் அறக்கட்டளை அறங்காவலர் ராதாகிருஷ்ணனுக்கு நான் நிதி உதவி செய்து தூண்டி விடுவதுபோல தகவல்களை பரப்பி வருகின்றனர்.முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி கடந்த 2011-16-ம் ஆண்டில் பொறுப்பில் இருந்தபோதே, 2015 ஆண்டே ராதாகிருஷ்ணன் பங்கேற்ற கூட்டங்கள் நடந்துள்ளன. 2018-ம் ஆண்டு அவர் தொடர்ந்த வழக்கில் 2019-ம் ஆண்டு தீர்ப்பு வந்தது. அப்போது இனாம்நில குடியிருப்பவர்கள் அரசுக்கு குறிப்பிட்ட தொகையை செலுத்த முடிவு செய்யப்பட்டது. ஆனால், தற்போதைய கரூர் எம்எல்ஏ இலவசமாக பட்டா தருகிறேன் எனக் கூறியதை நம்பி மக்கள் வாக்களித்து ஏமாந்தனர்.தற்போது நாங்கள் தவறு செய்ததால் தான் பிரச்சினை என்கிறார். நாங்கள் பொறுப்பில் இருந்த காலத்தில் தவறு செய்திருந்தால் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியதானே. 5 ஆண்டுகள் என்ன செய்து கொண்டிருந்தார். கோயில் இனாம் நிலம் தொடர்பாக தாந்தோணிமலையில் நேற்று முன்தினம் துண்டு பிரசுரம் வழங்கியப்போது அங்கு சென்ற என்னை தாக்க முயற்சி நடைபெற்றது. (அப்போது சில புகைப்படங்களை காட்டி) கடந்த 2021-ம் ஆண்டு தேர்தலின்போதே என்னை இருவர் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். என்னை கொலை செய்ய திட்டமிட்டிருப்பதாக தகவல் கிடைத்தது. அப்போதிருந்த எஸ்பி, டிஎஸ்பி ஆகியோருக்கு இத்தகவல் தெரியும். தேர்தலில் நான் வெற்றி பெற்றால் என்னை கொலை செய்ய திட்டமிருட்டிருந்தனர். தேர்தலில் தோல்வியடைந்ததால் உயிர் தப்பினேன். அவர்கள் கரூர் எம்எல்ஏ செந்தில் பாலாஜி, முதல்வர் ஆகியோருடன் புகைப்படங்களில் உள்ளனர்.அதன்பிறகு மாவட்ட ஊராட்சி துணை தலைவர் இடைத்தேர்தலின்போது என்னை தாக்க முயற்சி நடைபெற்றது. வேடசந்தூர் அருகே கடந்த சில ஆண்டுகளுக்கு முன் காரில் வந்தப்போது சிலர் தடுத்து தாக்கி மாவட்ட அவைத்தலைவரை கடத்தி சென்றனர். என் மீது ஆசிட் அடிக்க முயன்றனர்.மானாமதுரை, மதுரை பகுதியில் இருந்து ரவுடிகள், குண்டர்கள் எம்.சி.சங்கர் வரவழைத்து என் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டார்.தற்போது தேர்தலை நிறுத்த முயற்சி நடக்கிறது. என் உயிருக்கு ஆபத்து உள்ளது. நான் ரைபிள் கிளப் உறுப்பினர். துப்பாக்கி வைத்துக் கொள்ள உரிமம் கேட்டப்போது என் மீது குற்றவியல் வழக்குகள் இருப்பதாக் கூறி அனுமதி மறுத்துவிட்டனர். இன்று கன்மேன் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.என் உயிருக்கு ஆபத்து இருப்பதாக கடந்த டிசம்பர் மாதமே மத்திய உள்துறை அமைச்சகத்திடம் பாதுகாப்பு புகார் அளித்திருந்தேன். என் உயிருக்கோ, என் குடும்பத்தினரின் உயிருக்கோ எதேனும் ஆபத்து ஏற்பட்டால் அதற்கு முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அவரது தம்பி அசோக்குமார் ஆகியோர்தான் காரணம்.நியாயமான முறையில் தேர்தலை நடத்தவேண்டும். வெற்றி வாய்ப்பு எனக்கு பிரகாசமாக உள்ளது" என்றார்.இந்நிலையில், விஜயபாஸ்கருக்கு கரூர் நகர காவல் நிலையத்தில் இருந்து இன்ஸ்பெக்டர் தலைமையில் 5 போலீஸார் பாதுகாப்புக்காக வந்திருந்தனர்.

# மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கில் தமிழ் மொழிக்கு அதிக முக்கியத்துவம் வழங்க உயர் நீதிமன்றம் உத்தரவு



மதுரை: ஏப்,22

மதுரை மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கில் தமிழுக்கு அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கரூரைச் சேர்ந்த வழக்கறிஞர் தமிழ் ராஜேந்திரன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: தமிழகத்தில் கோயில் குடமுழுக்குகளில் மந்திரங்கள் ஓதும் போத சமஸ்கிருத மந்திரங்களுக்கு இணையாக தமிழ் மந்திரங்களையும் ஓத வேண்டும் என பல்வேறு வழக்குகளில் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இருப்பினும் கோயில்களில் குடமுழுக்கின் போது சமஸ்கிருத மந்திரங்கள் மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் அனைத்து கோயில்களிலும் குடமுழுக்கில் சமஸ்கிருதத்துக்கு இணையாக தமிழ் மந்திரங்களை பயன்படுத்துவதற்காக குடமுழுக்கு தொடர்பாக அறநிலையத் துறை அமைத்துள்ள உயர்மட்டக் குழுவின் அறிக்கையை அமல்படுத்த உத்தரவிட வேண்டும்.மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் குடமுழுக்கு செப்.17-ல் நடைபெறுகிறது. மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கு உட்பட அனைத்து கோயில்களில் குடமுழுக்கின்போது சமஸ்கிருத மந்திரத்துக்கு இணையாக தமிழ் மந்திரங்களையும் பயன்படுத்த உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.இந்த மனுவை நீதிபதி பரதசக்கரவர்த்தி இன்று விசாரித்தார். மனுதாரர் சார்பில் வழக்கறிஞர்கள் எம். கே.சுரேஷ், திலக கார்த்திகா வாதிட்டனர். பின்னர் நீதிபதி, ‘மதுரை சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மாநகரம். மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் பொற்றாமரை குளத்தில் தான் திருக்குறள் அரங்கேற்றப்பட்டதாக வரலாறு கூறுகிறது. பொற்றாமரை குளத்துக்கு தமிழ் இருக்கை என்றும் பெயர் உள்ளது. தமிழுக்கு சிறப்பு செய்யும் மதுரையில் மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கு விழாவில் மற்ற கோயில்களை விட தமிழ் மந்திரங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும்.கோயில் குடமுழுக்கு தொடர்பாக உயர் நீதிமன்றம் ஏற்கெனவே பிறப்பித்த உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இந்த உத்தரவு நகல் தமிழிலும் வழங்கப்படும். விசாரணை ஜூன் மாதத்துக்கு ஒத்திவைக்கப்படுகிறது’ என்று நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.

# “ஊழல் பணத்தை வாக்காளர்களுக்கு கொடுப்பதில் ஆண்ட, ஆளும் கட்சிகள் போட்டி” - வேல்முருகன்



சென்னை: ஏப்,22

“தமிழக வாழ்வுரிமைக் கட்சி மற்றும் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்து மாற்றத்துக்கான அரசியலை முன்னெடுக்க நாம் ஒவ்வொருவரும் முதலடியை எடுத்து வைப்போம். மாற்றம் எப்போதும் நம்மிடம் இருந்துதான் தொடங்க வேண்டும்” என தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘மாற்றத்துக்கான அரசியலை முன்னெடுக்க நாம் ஒவ்வொருவரும் முதலடியை எடுத்து வைப்போம். தமிழ்நாட்டில் 16-வது சட்டப்பேரவை தேர்தல் நாளை மறுநாள் ஏப்ரல் 23-ம் நாள் நடைபெறவிருக்கிறது. நம்மை யார் ஆளக் கூடாது என்பதைவிட, யார் ஆட்சி செய்தால் நாடு வளம்பெற்று முன்னேறும் என்ற சிந்தனை கடந்த கால தேர்தல்களைவிட தற்போது மேலோங்கி இருப்பதை காணமுடிகிறது.ஆண்ட கட்சியும், ஆளும் கட்சியும் சுதந்திர இந்தியாவில் தங்கள் ஊழல் பணத்தை ஒரு ரூபாயில் வாக்காளர்களுக்கு கொடுக்க துவங்கி, இந்த 16-வது தேர்தலில் 2 ஆயிரம் ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை போட்டிபோட்டுக்கொண்டு கொடுத்து தங்களின் ஊழலை வாக்காளர்களிடமும் திணிக்கிறார்கள்.கடந்த காலங்களில் ஆண்ட, ஆளும் கட்சிகள் தேர்தல் காலத்தில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் எத்தனை சதவீதம் நிறைவேற்றப்பட்டது. நிறைவேறாத வாக்குறுதிகளை ஏன் நிறைவேற்ற இயலவில்லை என்ன காரணமாக இருக்கும் என வாக்காளர்களை சிந்திக்க விடாததே இக்கட்சிகளின் தேர்தலின் சக்ஸஸ் பார்முலா.தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் அண்மையில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் 80 விழுக்காடு வேலைவாய்ப்புகளைத் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்களுக்கே வழங்கச் சட்டம் இயற்றப்படும். அரசு ஊழியர்களின் நீண்டகாலக் கோரிக்கையான பழைய ஓய்வூதிய திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும். மாணவர்கள் பெற்றுள்ள கல்விக் கடன்களை முழுமையாக ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். தமிழகத்தில் முறையான சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தி, அதன் அடிப்படையில் அனைத்துச் சமூகத்தினருக்கும் அவரவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உள் இடஒதுக்கீடு வழங்கப்படும். விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும்.ஹைட்ரோகார்பன், மீத்தேன் போன்ற விவசாய நிலங்களைப் பாதிக்கும் திட்டங்களுக்குத் நிரந்தரத் தடை விதிக்கப்பட்டு, மணல் கொள்ளையைத் தடுத்து இயற்கை வளங்களைப் பாதுகாக்கப்படும். தமிழகத்தில் படிப்படியாகக் கடைகளை மூடி, மது இல்லாத மாநிலமாக மாற்றத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்.மத்திய அரசிடமிருந்து மாநிலத்திற்கான நிதிப் பங்கீடு மற்றும் உரிமைகளைப் போராடிப் பெறுதல். நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு நிரந்தர விலக்கு பெற முன்னுரிமை. கச்சத்தீவை மீட்டெடுக்க அழுத்தம் கொடுப்பதோடு, எல்லை தாண்டி மீன்பிடிக்கும் மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்கவும், உயிரிழக்கும் மீனவர் குடும்பங்களுக்கு உரிய இழப்பீடு மற்றும் அரசு வேலை வழங்கவும் உறுதி அளிக்கப்படுகிறது என்பன உள்ளிட்ட அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.நாளை மறுநாள் ஏப்ரல் 23-ம் நாள் நடைபெறும் தேர்தல் தமிழக வாழ்வுரிமைக் கட்சி மற்றும் கூட்டணிக்கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு “கேமரா” சின்னத்தில் வாக்களித்து மாற்றத்துக்கான அரசியலை முன்னெடுக்க நாம் ஒவ்வொருவரும் முதலடியை எடுத்து வைப்போம். மாற்றம் எப்போதும் நம்மிடமிருந்துதான் தொடங்கவேண்டும் என்ற வாசகத்துக்கு ஏற்ப களம் காண்போம்’ எனத் தெரிவித்துள்ளார்.

# ‘இளைஞர்கள் பைக் வாங்க ரூ.10,000, கேபிள் டிவி கட்டணம் 50% குறைப்பு’ - அதிமுக கூடுதல் வாக்குறுதிகள் என்னென்ன?



சென்னை: ஏப்,22

கேபிள் டிவி கட்டணம் 50 சதவீதமாக குறைக்கப்படும், இளைஞர்கள் இரு சக்கர வாகனம் வாங்க ரூ.10 ஆயிரம் மானியம் வழங்கப்படும் என்பன உள்ளிட்ட கூடுதல் தேர்தல் வாக்குறுதிகளை அதிமுக அறிவித்துள்ளது.சட்டப்பேரவைத் தேர்தலுக்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஏற்கெனவே 297 தேர்தல் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், அதிமுக சார்பில் கூடுதல் வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன் விவரம்:• அதிமுக ஆட்சி அமைந்தவுடன், மா விவசாயிகளின் நலனை கருத்தில்கொண்டு, மாம்பழத்திற்கு ஆதார விலை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.• கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி, ஓசூர், தேன்கனிக்கோட்டை, தளி ஆகிய பகுதிகளில் பாரம்பரிய முறைப்படி நடந்து வரும் ‘அத்துக்கட்டு’ பண்டிகையை, பாரம்பரிய முறையில் தொடர்ந்து நடத்துவதற்கு அரசாணை பிறப்பிக்கப்படும்.• கட்டடத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள, கட்டடத் தொழிலாளர்கள் பணி செய்யும்போது தவறி விழுந்து உயிரிழக்க நேரிட்டால், அவர்களது குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்கப்படும்.• பனைத் தொழிலாளர்கள், பனை மரம் ஏறி தவறி விழுந்து உயிரிழக்க நேரிட்டால், அவர்களது குடும்பத்திற்கு ரூ. 20 லட்சம் இழப்பீடு வழங்கப்படும்.• அரசு கேபிள் டி. வி. கட்டணம் 50 சதவீதமாகக் குறைக்கப்படும்.• கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் முந்திரி உடைக்கும் தொழில் நடைபெற்று வருகிறது. அதிக அளவிலான பெண்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்களது வாழ்வாதாரத்தைக் கருத்தில்கொண்டு, சிறிய அளவிலான முந்திரி உடைக்கும் கை கருவி விலையில்லாமல் வழங்கப்படும்.

# “பாஜகவின் முதல் அடிமை யார் என போட்டி...” - திமுக, அதிமுக மீது தவெக தலைவர் விஜய் தாக்கு



சென்னை:ஏப்,22

“இந்தத் தேர்தலில் திமுக தோல்வியை சந்திப்பது நிச்சயம். திமுகவுக்கும் பாஜகவுக்கு இடையே மறைமுக டீலிங் இருக்கிறது. தேர்தல் தோல்விக்குப் பிறகு கட்சியை காப்பாற்ற பாஜக காலில் திமுக விழும்” என தவெக தலைவர் விஜய் பேசினார்.சென்னை, நந்தனம் மைதானத்தில் நடந்த தவெக பிரச்சார நிகழ்வில் விஜய் பேசியது: “நமது அரசியல் எதிரி திமுக, கொள்கை எதிரி பாஜக. அதில் என்றுமே நாம் மாறவில்லை. கொண்ட கொள்கையில் தவெக உறுதியாக இருக்கிறது.எம்மதமும் நம்மதம். அந்த உண்மையான முகம்தான் விஜய்யின் முகம். விஜய் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களின் நண்பனாக இருப்பான். சிறுபான்மை மக்களுக்கு என்றும் ஆதரவான நபராக விஜய் இருப்பான்.மதச்சார்பற்ற சமூக நீதி தான் நமது கொள்கை. இதில் 100 சதவீதம் இந்த விஜய்யை நீங்கள் நம்பலாம். விஜய் ஒன்று சொன்னால் அதிலிருந்து மாறமாட்டான்.திமுகவுக்கும் பாஜகவுக்கு இடையே மறைமுக டீலிங் இருக்கிறது என முன்பே சொன்னேன். இந்தத் தேர்தலில் திமுக தோல்வியை சந்திப்பது நிச்சயம். திமுக ஆட்சி கதம், கதம். திமுக 300, 200 சீட்டுகள் வெற்றி பெறும் என்று கடுப்பில் கருத்துக் கணிப்புகளை வெளியிடுகின்றனர். தேர்தலுக்குப் பிறகு என்ன நடக்கும் என்று சொல்கிறேன்.கட்சியை காப்பாற்ற பாஜக காலில் திமுக விழும். பாஜகவின் முதல் அடிமை யார் என போட்டி நடக்கிறது. திமுகவும் மற்றும் பலரும் தேர்தலில் மண்ணைக் கவ்வப் போவது உறுதி.என்னை நடிகர் நடிகர் என்று சொல்கிறார்கள். ஆமாம் நான் நடிகன் தான். நான் அரசியலுக்கு வந்து நடிக்கவில்லை.தமிழ்நாட்டில் இதுவரை எந்த அரசும் வாங்காத அளவுக்கு கடன் வாங்கி கடன் சுமையை உயர்த்தியது திமுக அரசு. இவ்வளவு கடன் வாங்கியதில் இளைஞர்களின் கல்விக் கடனையாவது ரத்து செய்திருக்கலாம்.மக்களை கண்டு கொள்ளாத நபர்களை வீட்டுக்கு அனுப்பாமல் கோட்டைக்கா அனுப்புவார்கள்? மக்களை கண்டுகொள்ளாத ஆட்சியை, தலைவரை வீட்டுக்கு அனுப்பப் போகும் தேர்தலில் கடைசி பிரச்சாரம்.மிக முக்கியமான நேரத்தில் இருக்கிறோம். திமுக பொய்யான வாக்குறுதிகளை அளித்துள்ளது. வீட்டு வரி உயர்ந்துள்ளது, குப்பைக்கு கூட வரி விதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் கடன் சுமை அதிகரித்துள்ளது.ஏதாவது ஒரு பிரச்சினையென்றால் விஜய் வெளியே வர மாட்டார் என 10 முறை தோற்ற சேலத்துக்காரர் சொல்கிறார். உங்களால் சேலத்தை தாண்டி வேறு இடத்தில் போட்டியிட முடியுமா? தோற்று விடுவோம் என பயந்துகொண்டு, சொந்தத் தொகுதியிலேயே நம்முடைய தவெக சின்னத்தைத் திருடிவர். முதல்வர் ஸ்டாலின் சாரிடமிருந்து தமிழகத்தை காப்பாற்றி ஆக வேண்டும். கரூரில் என்ன நடந்து என கரூர் மக்களே புட்டு புட்டு வைப்பார்கள். நான் ஸ்டாலினுக்கு என்ன கெடுதல் செய்தேன். அவர் சாப்பிடும் சாப்பாட்டில் மண்ணை போட்டேனா?ஸ்டாலின் சார்... கரூர் விஷயத்தில் நான் லேட்டாக வந்துட்டதாக பழியை தூக்கி என் மேல் போட்டார். நாமக்கல்லில் இருந்து கரூர் வரும் வழியில் இருக்கின்ற மக்களை அப்படியே விட்டுட்டு வர சொல்றீங்களா?நான் எப்படி வந்தேன் என அனைவரும் லைவில் பார்த்தனர். ஆனால், வாய்கூசாமல் என் மேல் பழி போடுகிறீர்கள். கரூரில் எந்த தவறும் செய்யவில்லை என்றால் உங்கள் அடிமையை ஏன் கரூரில் இருந்து கோவைக்கு அனுப்பினீர்கள்? சட்டப்பேரவைத் தேர்தலில் இந்த இரண்டு பேருமே வேண்டாம். இது ஒரு மாற்றத்துக்கான தேர்தல். ஸ்டாலின் சார் தேர்தலில் தோல்வி அடைந்த பிறகு, ஏண்டா விஜய்யை தொட்டோம் என நினைத்து நினைத்து வருந்துவீர்கள். தமிழகத்தில் இரண்டு முனை போட்டிதான். ஒன்று தீய சக்தி திமுக; மற்றொன்று தவெக. நீங்கள் தான் எனக்கு தேர்தலில் நீதி வழங்க வேண்டும்” என்று விஜய் பேசினார்.

# ‘பதைபதைக்கச் செய்கிறது தி.மலை சம்பவம்... பெண்களுக்கு துளியும் பாதுகாப்பில்லை’ - நயினார் நாகேந்திரன்



சென்னை:ஏப்,22

‘தமிழகத்தை சீரழித்த திமுக ஆட்சியில் பெண்களுக்கு துளியும் பாதுகாப்பில்லை என்பது மிகத் தெளிவாகிறது. பெண்கள் பாதுகாப்பை பறிக்கும் சமூக விரோதிகளை வளர்த்துவிட்டது திமுக ஆட்சி’ என திருவண்ணாமலை சிறுமி பாலியல் வன்கொடுமை சம்பவம் குறித்து பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் ஆவேசமாக கூறியுள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்ள திருவண்ணாமலைக்கு வந்திருந்த 15 வயது சிறுமியை 8 பேர் கொண்ட கும்பல் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்திருப்பதாக வெளிவந்துள்ள தகவல் மனதை பதைபதைக்கச் செய்கிறது.புண்ணிய பூமியான திருவண்ணாமலையில் தரிசனம் செய்ய வந்த இளம்பெண்ணை அவரது தாய் முன்பே இரு காவலர்கள் வன்கொடுமை செய்த ரணம் மனதை விட்டு ஆறும் முன்பே, மற்றொரு கொடூரம் அரங்கேறி இருப்பது திறனற்ற திமுக ஆட்சியால் பெண்களுக்கு துளியும் பாதுகாப்பில்லை என்பது மிகத் தெளிவாகிறது. பெண்கள் பாதுகாப்பை பறிக்கும் சமூக விரோதிகளை வளர்த்துவிட்ட திமுக ஆட்சிக்கு நாளை மறுநாள் தமிழக மக்கள் முடிவுரை எழுதுவர். தேசிய ஜனநாயக கூட்டணியைத் தேர்ந்தெடுத்து தமிழகத்தை மீட்டெடுத்து காப்பர்’ எனத் தெரிவித்துள்ளார்

# “எத்தனை கேஜ்ரிவால், ராகுல் வந்தாலும் தமிழகத்தில் என்டிஏ வெற்றியைத் தடுக்க முடியாது” - தமிழிசை



சென்னை: ஏப்,22

“தமிழகத்துக்கு எத்தனை அரவிந்த் கேஜ்ரிவால்கள், ராகுல்கள் வந்தாலும், தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றியைத் தடுக்க முடியாது” என பாஜக மூத்த தலைவர் தமிழிசை கூறியுள்ளார்.மயிலாப்பூர் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் தமிழிசை இன்று செய்தியாளர்களிடம் கூறியது: “நாங்கள் ஓட்டுக் கேட்டு மட்டும் செல்லவில்லை. அந்தந்தப் பகுதியில் உள்ள பிரச்சினைகளை குறித்து வைத்துள்ளோம். வெற்றி பெற்ற நூறு நாட்களில் அப்பகுதி மக்களின் அடைப்படை தேவைகளை பூர்த்தி செய்வோம். மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க தயாராக இருக்கிறேன்.பல இடங்களை தண்ணீர் பிரச்சினை இருக்கிறது. இவை அனைத்தும் சரி செய்யப்படும். எத்தனையோ தேர்தல்களை நான் சந்தித்துவிட்டேன். நாங்களும் கட்சியுடன் சேர்ந்து வளர்ந்து வருகிறோம். தற்போது எனக்கு மயிலாப்பூர் மக்கள் வாக்களிக்க வேண்டும். மீனவ பெண்களுக்கு தனி திட்டம் வைத்துள்ளேன். திமுகவின் கவுன்டவுன் ஆரம்பித்துவிட்டது.தமிழகத்துக்கு எத்தனை அரவிந்த கேஜ்ரிவால்கள், ராகுல்கள் வந்தாலும், தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றியைத் தடுக்க முடியாது. அமித் ஷாவின் ரோடு ஷோ நல்ல விதமாக அமைந்தது” என்று அவர் தெரிவித்துள்ளார்.

# “அன்புமணி கும்பலை 18 தொகுதிகளிலும் மண்ணைக் கவ்வச் செய்வீர்” - ராமதாஸ்



சென்னை: ஏப்,22

“இந்த ராமதாஸ் தோற்கலாம், ஆனால் துரோகம் ஒருபோதும் ஜெயிக்கக் கூடாது. என் ரத்தமே எனக்கு விஷமானாலும், என் தொண்டர்கள் எனக்கு மருந்தாக இருப்பீர்கள் என நம்புகிறேன். அன்புமணி போட்டியிடும் 18 தொகுதிகளிலும் அவரது துரோகக் கும்பலை மண்ணைக் கவ்வச் செய்யுங்கள்” என்று தனது தொண்டர்களுக்கு பாமக நிறுவனர் ராமதாஸ் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.இது குறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், “நேற்று நான் வெளியிட்ட வீடியோவைப் பார்த்துப் பலரும் கண்ணீர் வடித்தீர்கள். ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக நான் அனுபவித்துக் கொண்டிருக்கும் மரண வேதனை எனக்கு மட்டுமே தெரியும். எப்போது அன்புமணி என் பேச்சைக் கேட்காமல், என் கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டுப் பணத்துக்காக அலையத் தொடங்கினாரோ, அன்றே ஒரு தந்தையாக நான் செத்துவிட்டேன். உங்களுக்காக நான் சிறை சென்றேன், ரத்தம் சிந்தினேன்; ஆனால் அன்புமணி இன்று அந்த ரத்தத்தைச் ‘சமூக நீதி வியாபாரம்’ ஆக மாற்றிவிட்டார்.ஒவ்வொரு தேர்தல் சீட்டையும் பல கோடிகளுக்கு விற்று, நம் சமுதாயத்தின் உரிமைகளை அன்புமணி அடகு வைத்துவிட்டார். பெற்ற அப்பனையே கவனிக்காத ஒருவர், உங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு வேலை வாங்கித் தருவாரா? தன் மனைவியையும் மகளையும் அதிகாரத்துக்காகப் பயன்படுத்தும் இவர், சாதாரணப் பாட்டாளிப் பெண்களுக்கு என்ன நன்மையைத் தருவார்? தருமபுரியில் சவுமியா வெற்றி பெற்றால், அந்தப் புண்ணிய பூமி விரைவில் ‘அதர்மபுரி’ என்று பெயர் எடுக்கும்.அரசியலில் ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால், முதல்வர் ஸ்டாலின் தன் தந்தை கருணாநிதி சாகும் வரை கூடவே இருந்து கவனித்துக் கொண்டார். இன்று உதயநிதி தன் தந்தையைக் கவுரவப்படுத்துகிறார். ஆனால், எனக்கு வாய்த்த பிள்ளையோ, நான் உயிரோடு இருக்கும்போதே என்னைச் செத்துப்போனதாக நினைத்து அரசியல் பண்ணுகிறார். இதை விட ஒரு தகப்பனுக்குப் பெரிய அவமானம் என்ன இருக்க முடியும்?மாம்பழம் இனிக்கும் என்று இனி நம்பாதீர்கள். அந்தச் சின்னத்துக்குள் இப்போது துரோகம் எனும் விஷம் ஏறிவிட்டது. அந்த விஷத்தை முறியடிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. அன்புமணியின் துரோகக் கும்பலுக்கு ஓட்டுப் போடுவது, உங்கள் பெற்ற தகப்பன் தலையிலேயே நீங்கள் மண்ணள்ளிப் போடுவதற்குச் சமம்.இந்த ராமதாஸ் தோற்கலாம், ஆனால் துரோகம் ஒருபோதும் ஜெயிக்கக் கூடாது. என் ரத்தமே எனக்கு விஷமானாலும், என் தொண்டர்கள் எனக்கு மருந்தாக இருப்பீர்கள் என நம்புகிறேன். அன்புமணி போட்டியிடும் இந்த 18 தொகுதிகளிலும் அவரது துரோகக் கும்பலை மண்ணைக் கவ்வச் செய்யுங்கள். தர்மம் ஜெயிக்கட்டும்!” என்று ராமதாஸ் உருக்கமாக கூறியுள்ளார்.

# ‘சென்னை என்றுமே திமுகவின் கோட்டை’ - நடந்து சென்று வாக்கு சேகரித்த முதல்வர் ஸ்டாலின்




சென்னை: ஏப்,22

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடையும் நிலையில், முதல்வர் ஸ்டாலின் சென்னையில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நாளை மறுதினம் (ஏப்ரல் 23) அன்று நடைபெறுகிறது. தேர்தல் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைவதால், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.திமுக தலைவரும், தமிழக முதல்வருமான ஸ்டாலின் நேற்று சென்னையில் பல்வேறு தொகுதிகளில் பிரச்சாரம் செய்த நிலையில், இன்றும் சென்னையில் உள்ள சோழிங்கநல்லூர், வேளச்சேரி, சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார். இன்று காலையில் நடந்து சென்று வாக்கு சேகரித்த ஸ்டாலின், ஆட்டோ ஓட்டியும், இளைஞர்களிடம் செல்ஃபி எடுத்தும் உற்சாகமாக பிரச்சாரம் செய்தார்.இதனை தொடர்ந்து சென்னையில் தான் பிரச்சாரம் மேற்கொண்ட புகைப்படங்களை பகிர்ந்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘சென்னை என்றுமே தி.மு.க.வின் கோட்டை. சோழிங்கநல்லூர் - வேளச்சேரி - சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளில் மக்கள் அளித்த அன்பும் வரவேற்பும்’ எனத் தெரிவித்துள்ளார்.முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட மற்றொரு எக்ஸ் பதிவில், ‘டெல்லியின் சர்வாதிகாரம் தமிழ்நாடுக்குள் ஊடுருவாமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில், நாங்கள் எங்களைப் பாதுகாத்து வருகிறோம். ஜனநாயகத்தைக் காப்பதற்கு, பாசிசத்தைத் தோற்கடிப்பதே ஒரே தீர்வாகும். ஜனநாயகம் மற்றும் அந்த ஜனநாயகத்துக்குள் அடங்கியுள்ள வாக்களிக்கும் உரிமை ஆகியவை அளவற்ற வலிமை வாய்ந்தவை. ஜனநாயகத்தின் மகத்தான வலிமையின் மீதும், வாக்குச்சீட்டின் மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட தமிழ்நாடே இறுதியில் வெல்லும். சர்வாதிகாரப் பாதையில் பயணிக்க முயல்பவர்களை இந்திய நாடு நிச்சயம் தோற்கடிக்கும்’ எனத் தெரிவித்துள்ளார்.

# “அதிமுக ஆட்சி அமைந்தால் வளமான தமிழகம் உருவாகும்” - ஜி.கே.வாசன்



சென்னை:ஏப்,22

“மீண்டும் தமிழகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக ஆட்சி அமைய வேண்டும். அதன் மூலம் வலிமையான பாரதத்தில் வளமான தமிழகம் உருவாகும்” என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி.கே.வாசன் கூறியுள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “2026 சட்டமன்ற தேர்தலை சந்திக்கப் போகும் தமிழகத்தின் தற்போதைய உண்மை நிலை அனைத்து துறைகளிலும் வளர்ச்சி குன்றி, சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்து, பெண்களுக்கான பாதுகாப்பு இல்லை என்பதுதான். மேலும் தமிழக அரசு, மத்திய அரசோடு ஒத்த கருத்தாக இல்லாமல் காழ்ப்புணர்ச்சி அரசியல் செய்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.மீண்டும் தமிழகத்தில் அதிமுக ஆட்சி, எடப்பாடி பழனிசாமி தலைமையிலே அமைய வேண்டும். அதன் மூலம் வலிமையான பாரதத்தில் வளமான தமிழகம் உருவாகும். வலிமையான பாரதம் பிரதமர் மோடி தலைமையிலே இந்தியா பொருளாதாரத்திலும், பாதுகாப்பிலும் உறுதியாக செயல்படுகிறது.அதற்கு ஒத்த கருத்துடைய வளமான தமிழகம், வளர்சியான தமிழகம், பாதுகாப்பான தமிழகம் அமைய அதிமுக மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றியை தமிழக மக்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

# திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பெண்கள், குழந்தைகள், இளைஞர்களை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது: அன்புமணி



சென்னை:ஏப்,22

இன்னொரு முறை திமுக ஆட்சிக்கு வந்தால் பெண்கள், குழந்தைகள், இளைஞர்களை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது என தெரிவித்துள்ள பாமக தலைவர் அன்புமணி, தமிழகத்தில் தீய திமுக ஆட்சியை அகற்றி விட்டு, அதிமுகவின் நல்லாட்சியை ஏற்படுத்துவோம் என்று தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "தமிழ்நாட்டை தீமைகளிடம் இருந்து மீட்டெடுப்பதற்கான சட்டப்பேரவைத் தேர்தல் நாளை மறுநாள் ஏப்ரல் 23ம் தேதி நடைபெறவிருக்கிறது. இந்திய விடுதலைக்குப் பிறகு தமிழ்நாட்டில் இதுவரை நடைபெற்ற 16 சட்டப்பேரவைத் தேர்தல்களும் ஆட்சிக்கான உரிமையை வென்றெடுப்பதற்காக நடத்தப்பட்ட தேர்தல்கள் என்றால், இத்தேர்தல் அதையும் கடந்து ஐந்தாண்டுகளாக பீடித்திருந்த கிரகணத்தில் இருந்து தமிழ்நாட்டை மீட்டெடுப்பதற்கான தேர்தல் ஆகும். அதனால், இந்தத் தேர்தலில் வாக்காளர்களின் முக்கியத்துவமும், பொறுப்பும் அதிகரித்திருக்கிறது.தேர்தல் என்றாலே அது தமிழ்நாட்டில் திருவிழாவாகத் தான் பார்க்கப்படும். ஆனால், இந்தத் தேர்தல் நீதிக்கும், அநீதிக்கும் இடையிலான போராகவே பார்க்கப்படுகிறது. கடந்த ஒன்றரை மாதங்களாக நடைபெற்ற பரப்புரைகள் இன்றுடன் முடிவுக்கு வரும் நிலையில், களத்தில் உள்ள கூட்டணிகளின் தன்மைகளை தமிழக வாக்காளர்களாகிய நீங்கள் நன்றாக அறிந்திருப்பீர்கள். நீங்கள் அறிந்த உண்மைகளின் அடிப்படையில் யார் வீழ்த்தப்பட வேண்டும்; மாநிலத்தை வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுத்துக் காக்கும் பொறுப்பில் யார் அமர்த்தப்பட வேண்டும் என்பதை தீர்மானிப்பதற்கான 48 மணி நேரம் இன்று மாலை 6.00 மணி முதல் தொடங்குகிறது. இந்தக் காலத்தில் அறிவார்ந்தும், பொறுப்புடனும் சிந்தித்து உங்களின் முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.தமிழ்நாட்டு மக்களின் தேவைகள் தேர்தலுக்கு, தேர்தல் மாறுபடும். இன்றைய நிலையில் நமக்கான தேவை பெண்கள் மற்றும் குழந்தைகளுகான பாதுகாப்பும், இளம் தலைமுறையை போதையின் பிடியில் இருந்து மீட்டு எடுப்பதும் தான். உண்மையில் இந்த இரண்டும் வெவ்வேறு பிரச்சினைகள் அல்ல. இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை தான். வெளியில் செல்லும் பெண்களும், பள்ளிகளுக்கு செல்லும் குழந்தைகளும் பத்திரமாக வீடு திரும்புவார்களா? என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக மாறியிருக்கிறது. குழந்தைகள் முதல் மூதாட்டிகள் வரை பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாவதும், தங்களைக் காத்துக் கொள்ளப் போராடும் பெண்களும், குழந்தைகளும் படுகொலை செய்யப்படும் அன்றாட நிகழ்வுகளாகி விட்டன. ஐந்தாண்டுகளில் மட்டும் பெண்களுக்கு எதிராக 44,418 குற்றங்களும், குழந்தைகளுக்கு எதிராக 62,489 குற்றங்களும் நடந்திருக்கின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பொருத்தவரை தமிழ்நாடு கொடும் நரகமாக மாறியிருக்கிறது.இத்தனைக் கொடுமைகளுக்கும் காரணம் தமிழ்நாட்டில் மது, கஞ்சா உள்ளிட்ட போதை பொருள்களின் புழக்கம் தலைவிரித்தாடுவது தான். அதிகாரப்பூர்வமாக 4,787 மதுக்கடைகள் திறக்கப்பட்டுள்ளன என்றால், சட்டவிரோதமாக 20,000-க்கும் கூடுதலான சந்துக் கடைகளும், 1,500-க்கும் கூடுதலான மனமகிழ் மன்றங்களும் செயல்பட்டு வருகின்றன. இன்னொருபுறம் தெருவெங்கும் கஞ்சா உள்ளிட்ட அனைத்து வகையான போதைப் பொருள்களும் தடையின்றி விற்பனை செய்யப்படுகின்றன. ஆண்டுக்கு 22 லட்சம் கிலோ விற்பனையாகும் அளவுக்கு தமிழ்நாட்டில் கஞ்சா வணிகம் பெரும் தொழிலாக உருவெடுத்துள்ளது. இதற்கு எதிராக ஏராளமான போராட்டங்களை முன்னெடுத்தும் போதைப் பொருள்கள் விற்பனையை திமுக அரசு கட்டுப்படுத்தவில்லை.மாறாக, போதை வணிகம் செய்பவர்களுக்கு கட்சியில் பதவி கொடுத்தும், கோடிக்கணக்கில் நன்கொடை வாங்கியும் போதை வணிகத்தை திமுகவின் முதல்வர் குடும்பம் ஊக்குவிக்கிறது.

# ஆம்னி பேருந்துகள் அதிக கட்டணம் வசூல் செய்தால் நடவடிக்கை - போக்குவரத்து துறை எச்சரிக்கை



சென்னை: ஏப்.22

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம் எச்சரித்துள்ளது.இது குறித்து போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் ஏப். 23 அன்று நடைபெறுவதை முன்னிட்டு (21.04.2026 முதல் 26.04.2026 வரை) பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால் அதனைத் தடுக்க தமிழ்நாடு முழுவதும் வட்டாரப்போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச்சாவடி ஆய்வாளர்கள் அடங்கிய சிறப்புக்குழு அமைக்கப்பட்டு, அவ்வாறு இயங்கும் ஆம்னி பேருந்துகளை தீவிரமாக சோதனை செய்து அனுமதி ரத்து போன்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.மேலும் பொதுமக்கள் ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதாக தெரியவந்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கீழ்காணும் அலைப்பேசி எண்கள் மூலம், வாட்ஸ் ஆப்/ குறுஞ்செய்தி / குரல் பதிவு மூலமாக புகார் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை 1800 425 6151இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (வடக்கு) 99442 53404 இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (தெற்கு) 97905 50052 இணைப்போக்குவரத்து ஆணையரகம், மதுரை 90953 66394 இணைப்போக்குவரத்து ஆணையரகம், கோயம்புத்தூர் 91235 93971 துணைப்போக்குவரத்து ஆணையரகம், விழுப்புரம் 96773 98825 துணைப்போக்குவரத்து ஆணையரகம், வேலூர் 98400 23011 துணைப்போக்குவரத்து ஆணையரகம், சேலம் 78456 36423 துணைப்போக்குவரத்து ஆணையரகம், ஈரோடு 80569 40040 துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருச்சிராப்பள்ளி 90660 32343 துணைப்போக்குவரத்து ஆணையரகம், விருதுநகர் 90257 23800 துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருநெல்வேலி 96981 18011 துணைப்போக்குவரத்து ஆணையரகம், தஞ்சாவூர் 95850 20865

# தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி ஏப்.23-ல் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் விடுமுறை



சென்னை:ஏப்,22

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் ஏப்.23-ம் தேதி அனைத்து தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்று தமிழக தொழிலகப் பாதுகாப்பு, சுகாதார இயக்குநர் செ.ஆனந்த் உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23-ம் தேதி (வியாழன்) நடைபெற உள்ளது. இதையொட்டி, மாற்று முறை ஆவணங்கள் சட்டத்தின்படி அன்றைய தினம் தமிழக அரசு பொது விடுமுறை அறிவித்துள்ளது.இதைத் தொடர்ந்து, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்கீழ், தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள அறிவுரைகளின்படி, தமிழகம் முழுவதும் உள்ள தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் அனைத்து பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் தினக்கூலி தொழிலாளர்கள், தற்காலிக பணியாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களும் வாக்களிக்க வசதியாக தேர்தல் நாளில் அவர்களுக்கு சம்பளத்துடன் விடுமுறை வழங்குவது கட்டாயம் ஆகும்.எனவே, அனைத்து தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்களும் வாக்குப்பதிவு நாளான ஏப்.23-ம் தேதி அனைத்து தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் விடுமுறை அளிக்க வேண்டும்.அவ்வாறு விடுமுறை அளிக்கத் தவறும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் குறித்து புகார் செய்ய வசதியாக தொழிலகப் பாதுகாப்பு, சுகாதார இயக்ககம் சார்பில் மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.இதுதொடர்பாக புகார் தெரிவிக்க கட்டுப்பாட்டு அலுவலர்களை பொதுமக்கள், தொழிலாளர்கள் தொடர்பு கொள்ளலாம். அலுவலர்களின் பெயர், தொடர்பு எண் விவரம்: தொழிலகப் பாதுகாப்பு, சுகாதாரத் துறை இணை இயக்குநர்கள் எம்.வி.கார்த்திகேயன் (திருவொற்றியூர்) - 9444221011, எஸ்.கமலக்கண்ணன் (சென்னை) - 9884675712, நிர்வாக அலுவலர் எஸ்.சூரியா (சென்னை) - 9884470526, துணை இயக்குநர் த.மணிசங்கர் (காஞ்சிபுரம்) - 9940468249. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நடிகர் பார்த்திபனுக்கு சாதி, மதமற்றவர் சான்றிதழ்: வட்டாட்சியருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு



சென்னை:ஏப்,22

நடிகர் பார்த்திபனுக்கு சாதி, மதமற்றவர் என சான்றிதழ் வழங்குமாறு சோழிங்கநல்லூர் வட்டாட்சியருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நடிகரும் இயக்குநருமான பார்த்திபன், ''நான் சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டவன் என்பதால் எனக்கு சாதி, மதமற்றவர் என சான்றிதழ் வழங்க வேண்டும் என சோழிங்கநல்லூர் வட்டாட்சியரிடம் விண்ணப்பித்தேன்.ஆனால் அவர் எனது விண்ணப்பத்தின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே எனக்கு சாதி, மதமற்றவர் என சான்றிதழ் வழங்க வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்'' எனக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.இந்த மனு மீதான விசாரணை நீதிபதி எம்.தண்டபாணி முன்பாக நேற்று நடந்தது. அப்போது 'நோ கேஸ்ட், நோ ரிலீஜியன்' என வாசகம் பொறிக்கப்பட்ட சட்டை அணிந்து உயர் நீதிமன்றத்துக்கு வருகை தந்த நடிகர் பார்த்திபன், தனக்கு சாதி, மதம் அற்றவர் என சான்றிதழ் வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிடக்கோரி வேண்டுகோள் விடுத்தார்.அதையடுத்து நீதிபதி, ஏப்.29-ம் தேதிக்குள் மனுதாரரான பார்த்திபனுக்கு 'சாதி, மதமற்றவர்' என சான்றிதழ் வழங்க சோழிங்கநல்லூர் வட்டாட்சியருக்கு உத்தரவிட்டார். மேலும் பார்த்திபனின் இந்த நல்ல முயற்சிக்கு வாழ்த்து தெரிவித்த நீதிபதி, அதிகாரிகள் சான்றிதழ் வழங்கியது தொடர்பான நகலை ஏப்.29 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும், என உத்தரவிட் டுள்ளார்.

# பெண்களுக்கான வளர்ச்சித் திட்டங்களில் திமுக அரசு 'நம்பர் ஒன்' - செங்கல்பட்டு திமுக வேட்பாளர் பிரச்சாரம்



செங்கல்பட்டு:ஏப்,22

செங்கல்பட்டு தொகுதி திமுக வேட்பாளர் எம்.கே.டி. கார்த்திக் தண்டபாணி நேற்று ஆப்பூர், வெங்கடாபுரம், கொளத்தூர் உள்ளிட்ட இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்டார்.அப்போது, அவர் பேசுகையில், ''திமுக தேர்தல் அறிக்கையில் இல்லத்தரசிகள் மின்சாதன பொருட்கள் வாங்க ரூ.8 ஆயிரத்திற்கான சிறப்பு கூப்பன் வழங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது பெண்களுக்கு மிகவும் பயனுள்ள திட்டம். மகளிர் உரிமைத் தொகையை ஆயிரத்திலிருந்து ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் எனவும் வாக்குறுதி கொடுத்துள்ளார்.அரசு நலத்திட்டங்கள் நேரடியாக மக்களைச் சென்றடைந்துள்ளது. திமுக ஆட்சியில் அரசின் திட்டங்கள் பெறாத வீடுகளே இல்லை. முதல்வர் செயல்படுத்திய மக்கள் நலத் திட்டங்களால் அனைத்து தரப்பு மக்களும் மகிழ்ச்சியில் உள்ளனர்.அதனால், ஓட்டு கேட்க செல்லும் இடங்களில் அதிகளவில் பெண்கள் வரவேற்பு கொடுக்கின்றனர். மீண்டும் அமையும் திமுக ஆட்சியில் செங்கல்பட்டு தொகுதிக்கு சிறப்பு கவனம் எடுத்து திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, முன்மாதிரி தொகுதியாக மாற்றப்படும்'' என்றார்.

# செங்கல்பட்டு தொகுதி வாக்குச்சாவடி பணிகளுக்கு உள்ளூர் தன்னார்வலர்களை பயன்படுத்தக் கூடாது: தேர்தல் அலுவலரிடம் அதிமுக மனு



செங்கல்பட்டு: ஏப்,22

செங்கல்பட்டு தொகுதியில் 496 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. 2 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர்.இத்தொகுதியில் செங்கல்பட்டு, மறைமலைநகர், நந்திவரம் - கூடுவாஞ்சேரி ஆகிய 3 நகராட்சிகள் மற்றும் காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் ஆகியவை உள்ளன.இத்தொகுதியில், அதிமுக சார்பில் போட்டியிடும் கஜேந்திரன், செங்கல்பட்டு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ரம்யாவிடம் புகார் மனு அளித்தார்.அதில், "தொகுதியில் மண்டல அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், தன்னார்வலர்களைச் சொந்த ஊர்களில் தேர்தல் பணியாற்ற அனுமதிக்கக் கூடாது. அவ்வாறு அவர்கள் பணியாற்றும் பட்சத்தில் ஒரு கட்சி சார்ந்து செயல்படக்கூடும் என்பதால் அவர்களை உடனடியாக பணியிட மாற்றம் செய்ய வேண்டும்.மேலும், பணித்தள பொறுப்பாளர்களாகப் பணியாற்றுபவர்கள் பெரும்பாலானோர் திமுகவைச் சார்ந்தவர்களாக இருப்பதால் அவர்களை முழுமையாக தேர்தல் பணியில் இருந்து விடுவிக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

# "சசிகலா வருகை அரசியலை புரட்டி போட்டுள்ளது" - நடிகர் கார்த்திக் பிரச்சாரம்




சிவகங்கை: சசிகலா வருகை தமிழக அரசியலை புரட்டிப் போட்டுள்ளது என, மனித உரிமை காக்கும் கட்சித் தலைவரான நடிகர் கார்த்திக் தெரிவித்தார்.சிவகங்கை தொகுதியில் போட்டியிடும் அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழக வேட்பாளர் குரு.முருகானந்தத்தை ஆதரித்து, சிவகங்கை, இடையமேலூர் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு மனித உரிமை காக்கும் கட்சித் தலைவரான நடிகர் கார்த்திக் பிரச்சாரம் செய்தார்.அப்போது அவர் பேசியதாவது:நான் யாரையும் வசைபாட வரவில்லை. 'அதர்மம் தலைதூக்கும் போது நான் அவதரிப்பேன்' என்று கீதையில் கிருஷ்ணர் சொல்லியுள்ளார். அதன்படி, அதர்மம், துரோகம் தலைதூக்கியதால் நியாயம் கேட்க சசிகலா வந்துள்ளார். நானும் அவருக்கு துணையாக வந்துள்ளேன். உங்களுக்கு நல்லது நடக்க வேண்டும் என்றால் அவரை ஆதரியுங்கள். அவர் தமிழக மக்களை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக களத்தில் இறங்கியுள்ளார். சசிகலா வருகை அரசியலை புரட்டிப் போட்டுள்ளது. அவருக்கு பழி வாங்கும் எண்ணம் கிடையாது; நியாயத்துக்காக போராடுகிறார்.சசிகலா ஒருவருக்கு பதவி கொடுக்கிறார், அவர் சசிகலாவை கைவிடுகிறார். இது மேலோட்டமாக அனைவருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், அவர் எவ்வளவு துயரப்பட்டுள்ளார் என்பது அவரை சந்தித்த பிறகுதான் தெரிந்தது.சிலர் தமிழ், தமிழர் உரிமை என்று பேசுகின்றனர். ஆனால், தமிழை அழிக்கின்றனர். அவர்களிடமிருந்து தமிழை காக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் வாக்குப்பதிவு செய்ய கட்டணமில்லா பயணம்: மாநகர் போக்குவரத்துக் கழகம் தகவல்



சென்னை:ஏப்,22

மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் தங்களது வாக்குகளை பதிவு செய்ய சாதாரண கட்டணப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்யலாம் என, மாநகர் போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது.இதுகுறித்து, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் பிரபு சங்கர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வரும் 23ம் தேதி தமிழக சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தேர்தல் நாள் அன்று மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பார்வை குறைபாடு உள்ளவர்கள், தங்களது வாக்குகளை பதிவுசெய்ய மாநகர போக்குவரத்துக் கழக சாதாரண கட்டண பேருந்துகளில் பயணம் செய்யும் போது கட்டணமின்றி பயணம் செய்யலாம்.ஒரு நாள் மட்டுமே..60 வயதுக்கு மேற்பட்ட மூத்தக் குடிமக்கள் வாக்குகளை பதிவு செய்ய சாதாரண கட்டண பேருந்துகளில் மட்டும் பயணம் செய்யும் போது ஏதேனும் வயது சான்று மற்றும் அவர்களின் வாக்காளர் அடையாள அட்டையை காண்பித்து, மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பயண டோக்கன்களை அளிக்காமல், கட்டணமில்லா பயணச் சீட்டை நடத்துநரிடம் பெற்று பயணம் செய்யலாம். மாற்றுத் திறனாளிகள் மற்றும் பார்வை குறைபாடு உள்ளவர்கள் வாக்குகளை பதிவு செய்ய அவர்கள் யுடிஐடி அட்டை மற்றும் அவர்களின் வாக்காளர் அடையாள அட்டையை காண்பித்து மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா பயணச் சீட்டை பெற்று பயணம் செய்யலாம். தேர்தல் நாள் அன்று ஒரு நாள் மட்டுமே இச்சலுகையில் பயணம் செய்யலாம் என்று தெரிவித்துள்ளார்.

# ஆயுள் தண்டனை கைதி ஞானசேகரனுக்கு மீண்டும் உடல்நலக் குறைவு




சென்னை:ஏப்,22

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் துன்புறுத்தல் வழக்கில் ஆயுள் தண்டனை கைதியான ஞானசேகரன் உடல்நலக் குறைவு காரணமாக ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் மீண்டும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் துன்புறுத்தல் வழக்கில் கோட்டூர்புரத்தைச் சேர்ந்த பிரியாணி கடை உரிமையாளர் ஞானசேகரனை (38) கோட்டூர்புரம் அனைத்து மகளிர் போலீஸார் 2024 டிசம்பரில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.இந்த வழக்கில் ஞானசேகரனுக்கு ஆயுள் தண்டனை (30 ஆண்டு சிறை) விதித்து சென்னை மகளிர் நீதிமன்றம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 2-ம் தேதி தீர்ப்பளித்தது. இதையடுத்து அவர் புழல் சிறையில் தண்டனை கைதிகள் பிரிவில் அடைக்கப்பட்டார். இந்நிலையில் அவருக்கு நேற்று அதிகாலை 1.30 மணியளவில் திடீரென உடல் நலக்குறைவு (வலிப்பு) ஏற்பட்டதை அடுத்து, சிறைக் காவலர்கள் அவரை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். தற்போது ஞானசேகரன் அவசர சிகிச்சைப் பிரிவு வார்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.ஏற்கெனவே 4 முறை ஞானசேகரனுக்கு இதுபோன்று வலிப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ள நிலையில், தற்போது 5-வது முறையாக வலிப்பு நோய் காரணமாக மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னையில் மு.க.அழகிரி மருமகன் வீடு உள்பட 3 இடங்களில் வருமானவரித் துறை சோதனை




சென்னை: ஏப்,22

முன்னாள் மத்திய அமைச்சரான மு.க.அழகிரி மருமகன் வீடு உள்பட சென்னையில் 3 இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று திடீர் சோதனை நடத்தினர்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு நாளை மறுநாள் ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் முழு வீச்சில் செய்துள்ளது. இதுஒருபுறம் இருக்க பணம், பரிசு பொருட்களை கொடுத்து அரசியல் கட்சியினர் வாக்காளர்களை கவர்ந்துவிடக் கூடாது என்பதற்காக தேர்தல் ஆணையம் தொகுதிதோறும் பறக்கும் படைகளை அமைத்து 24 மணி நேரமும் சுழற்சி முறையில் கண்காணித்து வருகிறது.இந்நிலையில், வருமானவரித் துறை அதிகாரிகள் சென்னையில் 3 இடங்களில் நேற்று திடீர் சோதனையில் ஈடுபட்டனர். முதல்கட்டமாக சென்னை சாஸ்திரி நகர் 11-வது குறுக்குத் தெருவில் உள்ள குடியிருப்பு ஒன்றில் சோதனை நடத்தினர்.இது முன்னாள் முதல்வரான கருணாநிதியின் மகனும், முன்னாள் மத்திய அமைச்சருமான மு.க.அழகிரியின் மருமகன் வெங்கடேஷுக்கு சொந்தமான வீடு என கூறப்படுகிறது.இதேபோல், அதே பகுதியில் உள்ள தொழில் அதிபரான வெங்கடாச்சலம் என்பவருக்கு சொந்தமான வீடு மற்றும் வேப்பேரி இ.வி.கே. சம்பத் சாலையில் உள்ள குடியிருப்பு ஒன்றில் வசிக்கும் பைனான்சியரான பிரவீன் என்பவரது வீட்டிலும் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர்.அவர்களுடன் தேர்தல் பறக்கும் படையினரும் இணைந்து சோதனையில் ஈடுபட்டனர். சோதனையின் முடிவில் முக்கிய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.தேர்தல் நெருங்கும் நேரத்தில் பணப்பட்டுவாடா தொடர்பான புகாரின் அடிப்படையில் இந்த சோதனை நடைபெற்றதாக முதல்கட்டத் தகவல் வெளியாகி உள்ளது. ஆனால்,சோதனை நடைபெற்றதற்கான காரணத்தை வருமானவரித் துறை அதிகாரிகள் அதிகாரப்பூர்வமாக வெளியிடவில்லை. முக்கிய நபர்களின் வீடுகளில் நடைபெற்ற இந்த சோதனை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## அதிமுகவை விமர்சித்ததால் அண்ணாமலையை



“அதிமுக-வை விமர்சித்ததால் அண்ணாமலைக்கு தேர்தலில் சீட் வழங்காமல் பாஜக-வில் ஓரம்கட்டிவிட்டார்கள்” என கர்நாடகா துணை முதல்வர் டி.கே.சிவகுமார் தெரிவித்தார்.கிருஷ்ணகிரி மாவட்டம் தளி சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட கெலமங்கலத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் ராமச்சந்திரனை ஆதரித்து, கர்நாடக மாநில துணை முதல்வர் டி.கே சிவகுமார் நேற்று பிரச்சாரம் செய்தார்.அப்போது அவர் பேசியதாவது: பெரியாரின் தாய்மொழி கன்னடம் என்றாலும் அவர் தமிழர்களுக்காகவும், தமிழ் மொழிக்காகவும் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். கன்னடர்களும் தமிழர்களும் ஒரே தாயின் பிள்ளைகள் போன்றவர்கள். மொழியாலும் எல்லைகளாலும் நாம் பிரிந்திருந்தாலும், தென்னிந்தியாவின் உரிமைகளுக்காக நாம் அனைவரும் ஒற்றுமையுடன் போராட வேண்டும்.கடந்த 10 ஆண்டுகளில் பாஜக அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. இலவச அரிசி திட்டம், அங்கன்வாடி மற்றும் ஆஷா பணியாளர்கள் நலன் என எதற்கும் அவர்கள் முக்கியத்துவம் அளிக்கவில்லை. பாஜக-வினர் பொய்யான வாக்குறுதிகளைக் கூறி வருகின்றனர்.தமிழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு மிக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மக்களின் இதயங்களை வென்றுள்ள கட்சியாக திமுக திகழ்கிறது. கடந்த 5 ஆண்டுகளில் சாலைகள், பாலங்கள், பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் என பல வளர்ச்சித் திட்டங்களை திமுக அரசு முன்னெடுத்துள்ளது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழகம் முதன்மையான மாநிலமாக திகழ்கிறது.குறிப்பாக, தனியார் துறையில் உள்ளூர் மக்களுக்கு 75 சதவீதம் இடஒதுக்கீடு வழங்குவது போன்ற முக்கிய முடிவுகளை முதல்வர் ஸ்டாலின் எடுத்துள்ளார். காங்கிரஸ், திமுக, கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் இதர 20 கட்சிகள் அடங்கிய கூட்டணிக் கட்சிகள் ஒரு குடும்பமாகச் செயல்படுகின்றன. தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை கர்நாடகா மாநிலத்தில் ஐபிஎஸ் அதிகாரியாக பணியாற்றிய பின்னர் பணியைவிட்டு விலகி பாஜக-வில் இணைந்தார்.அதிமுக-வை அவர் விமர்சனம் செய்ததற்காக தற்போது அவருக்கு தேர்தலில் போட்டியிட சீட் வழங்காமல் பாஜக-வில் ஓரங்கட்டிவிட்டார்கள். பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பதில் எங்களது கூட்டணிக் கட்சிகள் உறுதியாக உள்ளன. பெங்களூருவில் உருவான இண்டியா கூட்டணி நாடு முழுவதும் வலுவாக உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

## உயிரிழந்தவர் குடும்பத்துக்கு இழப்பீடு தராதது ஏன்?- தமிழக அரசு இன்று விளக்கம் அளிக்க நீதிமன்றம் உத்தரவு



மதுரை:ஏப்,22

விருதுநகர் பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு இழப்பீடு வழங்காதது குறித்து அரசிடம் விளக்கம் பெற்று இன்று தெரிவிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.விருதுநகர் மாவட்டம் கட்டனார்பட்டியில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 25 பேர் உயிரிழந்தது தொடர்பாக உயர் நீதிமன்றம் தாமாக முன் வந்து விசாரணை நடத்தி உரிய உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும் என உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் வழக்கறிஞர் ஆர்.கருணாநிதி நேற்று முறையீடு செய்தார்.அப்போது நீதிபதிகளிடம், இதேபோன்ற பட்டாசு ஆலை விபத்து தொடர்பான வழக்கு ஒன்றில், உயிரிழந்தவர்களுக்கு ரூ.10 லட்சம் வரை இழப்பீடு தரவேண்டும். உயிரிழந்தவர்களின் குழந்தைகளுக்கு இலவச கல்வி உள்ளிட்ட வழிகாட்டுதலை தனி நீதிபதி பிறப்பித்துள்ளார்.இந்த உத்தரவை எதிர்த்து அரசு தரப்பில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இந்நிலையில் கட்டனார்பட்டியில் பட்டாசு ஆலையில் மீண்டும் விபத்து நடந்து 25 பேர் இறந்துள்ளனர்.தேர்தல் காலம் என்பதால் விபத்து பகுதிக்கு அதிகாரிகள் செல்லவில்லை. இறந்தவர்கள் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் இழப்பீடு வழங்கவில்லை.எனவே நிலுவையில் உள்ள வழக்கை விசாரணைக்கு எடுத்து உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றார்.பின்னர் நீதிபதிகள், இது தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்கில் அரசு தரப்பில் பதிலளிக்க நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. சரியான வழிகாட்டுதல்கள் தேவை, இதுவரை ஏன் இழப்பீடு வழங்கப்படவில்லை எனக் கேள்வி எழுப்பினர்.அதற்கு அரசு தரப்பில், அரசிடம் விளக்கம் பெற்று தெரிவிக்க அவகாசம் கோரப்பட்டது.பின்னர் நீதிபதிகள், இழப்பீடு குறித்து அரசிடம் உரிய விளக்கம் பெற்று தெரிவிக்க உத்தரவிட்டு விசாரணையை இன்றைக்கு தள்ளிவைத்தனர்.

## ஸ்டாலின் மீதான ராகுல் காந்தியின் கோபம் தீரவில்லை: தமிழக பாஜக கருத்து

சென்னை: ஏப்,22

“திமுகவினர் மன்றாடியதால் பிரச்சாரத்தில் போனால் போகிறது என்று ஸ்டாலின் பெயரை குறிப்பிட்ட ராகுல், ஸ்டாலினை முதல்வராக்குங்கள் என்று ஒரு இடத்தில் கூட சொல்லவில்லை” என தமிழக பாஜக விமர்சித்துள்ளது.இது குறித்து அக்கட்சியின் மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ். பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழக சட்டப்பேரவை தேர்தல் பிரசாரம் இன்று முடிகிறது. அதிமுக, பாஜக, பாமக, அமமுக, தமாகா உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மக்கள் அமோக ஆதரவு அளிப்பது பிரசாரத்தில் கண் கூடாகப் பார்க்க முடிகிறது.பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ், ராஜஸ்தான் முதல்வர் பஜன்லால் சர்மா, மத்திய தொழில்துறை அமைச்சர் பியூஸ் கோயல், மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் உள்ளிட்டோர் பிரச்சாரம் செய்தனர்.சென்னை, மதுரை, திருச்சி, நாகர்கோவில், கோவை என பிரதமர் மோடி பிரச்சாரம் செய்த அனைத்து இடங்களிலும் அதிமுக பொதுச் செயலர் பழனிசாமி உள்ளிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்த ஒற்றுமை களத்திலும் எதிரொலித்து வருவதால் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றி உறுதியாகியுள்ளது. திமுகவுடன் கூட்டணி அமைக்க காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி விரும்பவில்லை. ஆனால், இடைத்தரகர் ப. சிதம்பரம் வாயிலாக, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை பிடித்து குறுக்கு வழியில் காங்கிரஸுடன் திமுக தலைவர் ஸ்டாலின் கூட்டணி அமைத்தார்.ஆனாலும் ராகுல் காந்தியின் கோபம் தீரவில்லை.




அதனால்தான், கடந்த 18-ம் தேதி, திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருச்சி மாவட்டங்களிலும், 20-ம் தேதி தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ராகுல் காந்தி பிரச்சாரம் செய்தார். ஆனால், எங்கும் திமுக தலைவர் ஸ்டாலின் உடன் இருக்கவில்லை. பொன்னேரியில் பிரச்சாரத்தை துவக்கிய ராகுல் காந்தி தனது முதல் உரையில் திமுக தலைவர் ஸ்டாலின் பெயரையே குறிப்பிடவில்லை. அதன்பிறகு போனால் போகிறது என்று திமுகவினர் மன்றாடியதால் ஸ்டாலின் பெயரை குறிப்பிட்டாலும், ஸ்டாலினை முதல்வராக்குங்கள் என ஒரு இடத்தில் கூட சொல்லவில்லை.கிருஷ்ணகிரியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவும், திமுக தலைவர் ஸ்டாலினும் இணைந்து பிரச்சாரம் செய்தனர். ஆனால், ஸ்டாலின் பேசிக் கொண்டிருக்கும் போதே, வேலை இருக்கிறது எனக்கூறி பாதியிலேயே கார்கே வெளியேறி விட்டார். தனக்கு தானே சர்வாதிகாரி என அறிவித்துக் கொண்ட ஸ்டாலினுக்கு காங்கிரஸ் அளித்த மரியாதை இதுதான். கன்னியாகுமரியில் பிரச்சாரம் செய்த ராகுலுக்கு திமுக அமைச்சர் மனோ தங்கராஜ் சால்வை அணிவிக்க வந்தபோது அதை ஏற்க ராகுல் காந்தி மறுத்து விட்டார். அதனால்தான் ராகுல் காந்தியை கடுமையாக எதிர்த்து வரும் பிஹார் முன்னாள் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ், ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் ஆகியோரை கூட்டி வந்து தனது புகழை பாட வைத்துள்ளார் ஸ்டாலின்.திமுக கூட்டணியில் உள்ள தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா, “திமுக ஆட்சியில் பாலியல் வன்கொடுமை, கொலை, கொள்ளை, போதை பொருள் விற்பனை தவிர வேறு என்ன குற்றச்சாட்டுகளை கூற முடியும்?” எனக் கேட்டு ஒட்டுமொத்த தமிழகத்தையும் அதிர வைத்துள்ளார்.இப்படி திமுக கூட்டணியில் உள்ள கட்சிகள் ஒவ்வொன்றும் வேண்டா வெறுப்பாக ஏதோ கூட்டணி வைத்தோம். பிரச்சாரம் செய்தோம் என கடைக்கு டீ ஆற்றி வருகின்றன.திமுக ஆட்சி மீது தமிழக மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர். அந்த கோபத்தை ஏப்.23-ம் தேதி வியாழக்கிழமை காட்டுவார்கள். இன்னும் 15 நாட்களில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமையில் புதிய ஆட்சி அமையும். திமுக கூட்டணி படுதோல்வி அடையும்” என்று அவர் கூறியுள்ளார்.

## ‘ஜனநாயகன்’ லீக்கான விவகாரம் | எல்லாம் எதிர்பார்த்ததுதான் என எஸ்.ஏ.சி பேட்டி





’ஜனநாயகன்’ லீக்கானது தொடர்பாக அதிர்ச்சியடையவில்லை என்று விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.சில தினங்களுக்கு முன்பு விஜய் நடிப்பில் உருவான ‘ஜனநாயகன்’ படம் இணையத்தில் லீக்கானது. இது தொடர்பாக 6 பேரை கைது செய்துள்ளது காவல்துறை. இந்த விவகாரம் திரையுலகினரை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இதனிடையே இந்த விவகாரம் தொடர்பாக எஸ்.ஏ.சி அளித்த பேட்டியில், “மலேசியாவில் நடந்த இசை வெளியீட்டு விழாவில் விஜய் பேசும் போது, நான் அரசியலுக்கு போகிறேன். என்னை வைத்து படம் பண்ணுகிறீர்கள், நிறைய பிரச்சினைகள் வரும். உங்களுக்கு ஓ.கேவா என்று கேட்டேன் என்றார். பிரச்சினைகள் வரும் என்று நினைத்து தான் விஜய் சொன்னார். அதே போல் பிரச்சினைகள் வரும் என்பது எல்லாம் எதிர்பார்த்த ஒன்று தான்.ஒருவரை முதலில் மன ரீதியாக அடிப்பது, அடுத்து பண ரீதியாக அடிப்பது. இந்தச் சமயத்தில் ‘ஜனநாயகன்’ இணையத்தில் வெளியாகிறது என்றால் அது எதிர்க்கட்சியினரின் சதி என்ற சந்தேகம் வருகிறது. ’ஜனநாயகன்’ லீக்கானது தொடர்பாக அதிர்ச்சியடையவில்லை” என்று தெரிவித்துள்ளார்.

## மே 8-ம் தேதி வெளியாகிறது ‘29’ - படக்குழு அதிகாரப்பூர்வ அறிவிப்பு



’29’ திரைப்படம் மே 8-ம் தேதி வெளியாகும் என படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. கார்த்திக் சுப்பராஜ் மற்றும் லோகேஷ் கனகராஜ் இணைந்து தயாரித்துள்ள படம் ‘29’. இப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து இறுதிகட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. தற்போது இப்படம் மே 8-ம் தேதி வெளியாகும் என படக்குழுவினர் ப்ரோமோ வீடியோ உடன் அறிவித்துள்ளனர். தமிழக தேர்தல் முடிந்து, புதிய அரசு பதவியேற்ற உடன் இப்படம் வெளியாகவிருப்பது குறிப்பிடத்தக்கது. ரத்னகுமார் இயக்கியுள்ள இப்படத்தில் விது, ப்ரீத்தி அஸ்ரானி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். முழுக்க காதலை மையப்படுத்தி இப்படம் உருவாகி இருக்கிறது. இதற்கு ஒளிப்பதிவாளராக மாதேஷ் மாணிக்கம், இசையமைப்பாளராக ஷான் ரோல்டன் ஆகியோர் பணிபுரிந்துள்ளனர். இதுவரை வெளியான பாடல்கள் அனைத்துமே இணையத்தில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளன.விரைவில் ட்ரெய்லரை வெளியிட்டு, படத்தின் விளம்பரப்படுத்தும் பணிகளைத் தொடங்க படக்குழு திட்டமிட்டு இருக்கிறது.

## காயம் காரணமாக நடப்பு ஐபிஎல் சீசனில் இருந்து ஆயுஷ் மாத்ரே விலகல்



சென்னை: சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் பேட்ஸ்மேனான ஆயுஷ் மாத்ரே, காயம் காரணமாக நடப்பு சீசனில் இருந்து விலகி உள்ளார். இதை சிஎஸ்கே அணி நிர்வாகம் உறுதி செய்துள்ளது.கடந்த சனிக்கிழமை அன்று சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தின்போது தொடை பகுதியில் அவருக்கு காயம் ஏற்பட்டது. இந்த காயத்திலிருந்து குணமடைந்து, களம் திரும்ப எப்படியும் 6 முதல் 12 வார காலமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் நடப்பு சீசனில் இருந்து அவர் விலகி உள்ளார்.நடப்பு சீசனில் சிஎஸ்கே அணிக்கு பவர்பிளேவின் கடைசி ஓவர்களில் ரன் சேர்க்க ஆயுஷ் மாத்ரேவின் அதிரடி ஆட்டம் முக்கியமானதாக அமைந்தது. மும்பையை சேர்ந்த ஆயுஷ் மாத்ரே, யு19 உலகக் கோப்பையை இந்திய அணிக்காக வென்று கொடுத்தவர். அவர் தலைமையிலான அணி கடந்த பிப்ரவரி மாதம் சாம்பியன் பட்டம் வென்றிருந்தது.நடப்பு ஐபிஎல் சீசனில் ஆறு ஆட்டங்களில் 201 ரன்களை அவர் எடுத்துள்ளார். இதில் இரண்டு அரைசதம் அடங்கும். அவரது ஸ்ட்ரைக் ரேட் 177. கடந்த சீசனில் ருதுராஜ் கெய்க்வாட்டுக்கு மாற்று வீரராக ஆயுஷ் மாத்ரே, சிஎஸ்கே அணியில் இடம்பிடித்தார். அந்த சீசனில் 7 ஆட்டங்களில் 240 ரன்கள் எடுத்திருந்தார்.இந்நிலையில், இந்த சீசனில் அவர் விலகி உள்ளது சிஎஸ்கே அணியின் டாப் ஆர்டர் பேட்டிங் வரிசையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ஐஎஸ்எல் கால்பந்து தொடர்: சென்னை முகமேதன் இன்று பலப்பரீட்சை



சென்னை: ஐஎஸ்எல் கால்பந்து தொடரில் சென்னை நேரு விளையாட்டரங்கில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென்னையின் எஃப்சி - முகமேதன் ஸ்போர்டிங் கிளப் அணிகள் மோதுகின்றன. சென்னையின் எஃப்சி அணி 8 ஆட்டங்களில் விளையாடி 2 வெற்றி, 2 டிரா, 4 தோல்விகளுடன் 8 புள்ளிகள் பெற்று பட்டியலில் 10-வது இடத்தில் உள்ளது.முகமேதன் ஸ்போர்டிங் கிளப் அணி 8 ஆட்டங்களில் விளையாடி ஒன்றில் கூட வெற்றி பெறவில்லை. அந்த அணி ஒரு ஆட்டத்தை டிரா செய்த நிலையில் 7 ஆட்டங்களில் தோல்வி அடைந்திருந்தது. சென்னையின் எஃப்சி அணி கடைசியாக டெல்லி ஸ்போர்டிங் கிளப் அணியை தோற்கடித்து இருந்தது. இதுவரை சென்னையின் எஃப்சி, முகமேதன் ஸ்போர்டிங் கிளப் அணிகள் 2 முறை நேருக்கு நேர் மோதி உள்ளன. இதில் ஒரு ஆட்டத்தில் முகமேதன் அணி வெற்றி பெற்றிருந்தது. ஒரு ஆட்டம் டிராவில் முடிவடைந்திருந்தது. நடப்பு சீசனில் முகமேதன் அணி சிறந்த பார்மில் இல்லை. இதனால் சென்னையின் எஃப்சி அணி இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற்று முழுமையாக 3 புள்ளிகளை பெறுவதில் கவனம் செலுத்தக்கூடும்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CALL: 044-22772060,9443699066